**வரையறுத்த மஹவெலி கால்நடை தொழில்முயற்சிக் கம்பனி - 2017/2018**

வரையறுத்த மஹவெலி கால்நடை தொழில்முயற்சிக் கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, ஏனைய விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்கநெறி தேவைப்பாடுகளுக்கு நான் இணங்கியுள்ளேன் எனவும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கணக்காய்வு திட்டமிட்டு அமுல்ப்படுத்தப்படுகின்றன என்பதற்கு இந்நியமங்கள் எதிர்பார்க்கின்றது.

நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை மதிப்பீடு செய்தலினையும் உள்ளடக்கி கணக்காய்வாளரின் தீர்ப்பு அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் நியாயமாகச் சமர்ப்பிப்பதற்கும் உரியதான உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்ற போதிலும் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயத்தினை வெளியிடுவதற்கு கருத்தில் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்ததன்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்வதனைப் போல நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் தொடர்பாக மதிப்பீடு செய்தலும் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதிளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா 1,602,222 ஆக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 1,295,083 ஆக இருந்ததனால் ரூபா 307,139 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வாண்டில் செலுத்திய வட்டி ரூபா 60,380 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியால் ரூபா 19,897,953 தொகையான நிலையான சொத்துக்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் 2017 ஏப்ரல் 01 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதி மற்றும் மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கல் மாத்திரம் பதியப்பட்டிருந்தும் ஒவ்வொரு

சொத்துக்களை கொள்வனவு செய்த திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனவே 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள சொத்துக்களை இனங்காண முடியாததுடன் சொத்துக்களை பதிவழித்த பெறுமதியின் தன்மை தொடர்பாகவும் உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) பொருள் மீளாய்வு அறிக்கைக்கு இணங்க 08 தொகுதிகளின் கீழே ஆண் மற்றும் பெண்களாக வகைப்படுத்தப்பட்ட இனவிருத்தி செய்யப்பட்ட 17,720 தாய் மிருகங்களின் (Breeder Stock) பெறுமதியை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யாது ரூபா 20,179,278 தொகையான புத்தகப் பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இருப்பின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத இருப்புக்களில் ரூபா 124,946 தொகையான கலப்பு உணவு (Mixed Feed) மற்றும் ரூபா 141,337 தொகையான ஏனைய இருப்புக்கள் (Other Stock) உள்ளடக்கப்பட்டிருந்ததனால் இருப்புக்கள் மிகைக் கணிப்பீடு செய்யப்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) 26 வகையான இரசாயனப் பொருட்கள் (Drugs) 2016 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததாக (Condemned) இனங்காணப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையிலும் அவ்வாறே காணப்பட்டிருந்ததுடன் இந்த இருப்பின் பெறுமதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் இந்த இருப்பு இறுதி இருப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதா இல்லையாயின் பதிவழிக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) கம்பனியின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதவையாக (Condemned) பழுதடைந்த 577 பொருள் இருப்பு விடயங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இச்சொத்துக்களின் பெறுமதி தொடர்ந்தும் நிலையான சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா இல்லையாயின் பதிவழிக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) செயன்முறைப்படுத்தல் பிரிவின் குளிர்காப்பு அறையிலுள்ள (Proccessing Unit- Cool room) 14 விடயங்களின் பௌதீக மீதியானது பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாது பின்காட்களில் குறிப்பிட்ட 9,226 Kg மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த இருப்பின் பெறுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் இந்த இருப்பு இறுதி இருப்பிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஏ) கம்பனியால் 2018 நிதி ஆண்டிற்கான பேரேட்டிலிருந்து கணக்கீட்டு முறைமையினூடாகத் தயாரிக்கும் போது இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பெறுமதிகள் (அளவுகள்) கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதியில் ஆகக் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்து மீள் கணிப்புச் செய்தல் (rollback) 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பேரேட்டிலுள்ள இருப்புக்களானது இருப்பு மீளாய்வு பேரேட்டிலுள்ள பெறுமதிகள் அவ்வாறே பேணப்படுவதன் காரணமாக ரூபா 36,174,595 தொகையான இருப்புக்கள் மிகைக் கணிப்பீடு அல்லது குறைந்த கணிப்பீடு செய்யப்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

ஐ) கம்பனியின் நிதி ஆண்டிற்கான பேரேட்டில் பன்றிகள், தென்னை மரங்கள் முதலியவற்றிற்காக உயிரியல் விஞ்ஞான சொத்துக்களாக பேரேட்டில் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காததன் காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 41 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் தனியான ஒரு விடயமாக உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை சமர்ப்பிக்கமுடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஒ) ரூபா 69,183,019 தொகையான வணிக பெறவேண்டிய மீதிக்குள் உள்ளடக்கப்பட்ட 9 மீதிகள் தொடர்பான ரூபா 36,688,851 மொத்த தொகையின் விபரம் அதாவது 53 சதவீதமான பெறுமதிக்குரிய காலப்பகுப்பாய்வு, பட்டோலைகள் எதுவும் சமர்ப்பிக்கப்படாததுடன் அந்த மீதிகள் நீண்டகாலமாக காணப்பட்டு வருவதுடன் மீள அறவிடமுடியாதமை ஆபத்து அவதானிக்கப்பட்டது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 39 இன் 63 ஆம் பந்தியின் பிரகாரம் இச்சொத்துக்களின் பாதிப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் இச்சொத்துக்களின் பெறுமதி அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்டது.

(ஓ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 171,804,248 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த பட்டோலையின் பிரகாரம் வருமானம் ரூபா 168,226,004 ஆக இருந்ததனால் ரூபா 3,578,244 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஔ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் ஆண்டின் போது ரூபா 11,507,543 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 11,092,044 எனக் காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 415,499 வித்தியாசமாகும்.

(க) நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் தொழிற்படு மூலதன மாற்றங்களில் இருப்பு அதிகரிப்பு ரூபா 2,768,920 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் பெறுமதி ரூபா 1,905,598 ஆக இருந்ததனால் ரூபா 863,322 வித்தியாசமாகும்.

(கா) நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரிப்பெறுமதி ரூபா 702,835 ஆக இருந்ததுடன் பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய வரிப் பெறுமதி ரூபா 2,312,330 ஆக இருந்ததனால் ரூபா 1,609,495 வித்தியாசமாகும்.

(கி) நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 27,157,943 ஆக இருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 27,352,328 ஆக இருந்ததனால் ரூபா 194,385 வித்தியாசமாகும்.

(கீ) ஏனைய செலுத்த வேண்டிய வரி மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் ஆரம்ப மீதிப் பெறுமதி சம்பந்தமாக பேரேடு மற்றும் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் முறையே ரூபா 165,311 மற்றும் ரூபா 145,358 வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(கு) இலாப அல்லது நட்ட கூற்றின் பிரகாரம் வட்டி வருமானம் ரூபா 3,413,555 ஆக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் வருமானம் ரூபா 3,156,025 ஆக இருந்ததனால் ரூபா 257,530 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(கூ) ஆண்டின் போது நிலையான வைப்புக்கள் வட்டியாக ரூபா 2,180,338 கிடைத்திருந்தும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 4,356,874 என்பதனால் ரூபா 2,176,536 வித்தியாசமாகும்.

(கெ) ரூபா 2,136,334 தொகையான செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி, ரூபா 10,630,937 தொகையான வணிக மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளுக்கான ஐயக்கடன், ரூபா 931,767 தொகையான பொருளாதார சேவைக்கட்டணமும் நிறுத்திவைத்தல் வரியும், ரூபா 2,370,190 தொகையான பிற்போட்ட வரி, ரூபா 1,314,491 தொகையான செலுத்த வேண்டிய வருமானவரி, ரூபா 702,835 தொகையான செலுத்த வேண்டியவைகளுக்காக விபரமான பட்டோலையும் ரூபா 36,688,851 தொகையான வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி என்பவற்றிற்கான கணிப்பீடு செய்யும் ஆவணமும் ரூபா 105,245,935 தொகையான வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய தொகையான வணிக மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளுக்கான காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிரயாத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது. அதன் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

**2.2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் அறிவுறுத்தப்பட்டவாறு நான் பின்வரும் விடயங்களைக் காட்டுகிறேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை நோக்கெல்லை, கணக்காய்வின் மட்டுப்பாடுகள் என்பன மேலே காட்டப்பட்டுள்ளன.

(ஆ) இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதிளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது. அதன் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 995,230 கடன் பணம் மீளாய்வாண்டின் இறுதிவரை 05 ஆண்டுகளை மிகைத்திருந்தும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட குறிப்பு இலக்கம் 07- வணிக மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் குறிப்புக்குள் உள்ளடக்கப்பட்ட ரூபா 36,688,851 மீதி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் காணப்பட்டு வருவதுடன் அம்மீதிகளை அறவீடு செய்வதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 1,970,378 தொகையான செலுத்த வேண்டிய பங்கிலாபம் வரிப் அப்றெமதியை இன்றுவரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017/2018 ஆம் ஆண்டிற்கான இறுதிக்கணக்கில் வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிக்குள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 1,970,413 தொகை மற்றும் 1 ஆண்டிற்கும் 2 ஆண்டுகளுக்குமிடையே காணப்பட்ட மீதி ரூபா 47,952,704 ஆகும்.

(உ) வணிக செலுத்த வேண்டிய மீதியான ரூபா 80,890,415 பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்ட ரூபா 31,633,183 கூட்டுமொத்தமான மீதி 2017 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டதுடன் அது வணிக செலுத்த வேண்டிய மீதிகளில் 39% என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2017 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 15,497,840 தொகையான நிச்சயமற்ற கடன்கொடுத்தோர் மீதியை ஆராய்ந்து பார்த்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்த மீதியானது ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் 78% என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) நானாவித கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 827,827 பெறுமதி 2017 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்து வைக்கப்படாது அவ்வாறே காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இனக்கமின்மைகள்**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கம்பனிகள் நியதிச்சட்டத்தின் 69 ஆம் பந்தி | அமைப்பு அகவிதியின் பிரகாரம் பொதுச்சபைக் கூட்டத்தின் போது இக்கம்பனியின் பணிப்பாளர் சபை நியமிக்கப்படவேண்டிய போதிலும் அதற்கு முரணாக அமைச்சரினால் கம்பனியின் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 7,447,304 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 26,359,133 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 18,911,829 வீழ்ச்சி ஏற்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை வருமானம் ரூபா 4,532,885 ஆல் அதாவது 2.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் விற்பனைக் கிரயம் ரூபா 18,001,531 ஆல் அதாவது 14.8 சதவீத்தால் முன்னேற்றமடைந்திருந்தது. அதற்கிணங்க மொத்த இலாபம் ரூபா 22,534,236 ஆல் குறைவடைதல் மற்றும் நிருவாகச் செலவுகள் ரூபா 1,184,289 ஆல் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 148 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் தேறிய சொத்துக்கள் கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதனத்தின் அரைவாசியினை விட குறைவு எனவும் அதற்கிணங்க கம்பனியின் நெருக்கடியான மூலதன நட்ட நிலைமை இன்றுவரை தவிர்க்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**(அ) ஹுருகஸ்வெவ பண்ணை**

(i) இக்காணி மஹவெலி கால்நடை தொழில்முயற்சி கம்பனிக்குரியதல்லாததுடன் குத்தகை உடன்படிக்கையும் இல்லாததுடன் காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இக்காணியின் நில அளவையானது உறுதியாக இதுவரை இனங்காணப்பட்டிருக்காததனால் பயன்படுத்தப்படாது காணப்பட்ட நிலத்தினை உறுதியாக இனங்காண முடியாது என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற காணியில் அமைந்துள்ள இரண்டு களஞ்சியங்கள் MLE/B21 மற்றும் MLE/B24 ஆக பெயரிடப்பட்டுள்ளதுடன் அக்களஞ்சியத்தில் கோழி உணவினை அரைக்கும் இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக அக்களஞ்சியத்தில் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத பொருட்கள் பாதுகாப்பின்றி உள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கலங்குட்டிய பண்ணை**

இக்காணிக்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையான ஒன்பது ஆண்டுகளுக்காக மிகைக் கட்டணத்தை உள்ளடக்கிய ரூபா 10,485,000 பணம் செலுத்த வேண்டியுள்ளது எனவும் அவ்வரிப் பணம் செலுத்தப்படாததனால் வரி உரிமை இரத்துச் செய்யப்பட்டது என RPM/T/L/CLO/கல்/74 ஆம் இலக்க 2017 ஒக்தோபர் 10 ஆந் திகதியள கடித்தின் மூலம் மஹவெலி அதிகாரச் சபையின் வதிவிட தொழில்முயற்சி முகாமைத்துவத்தினால் (எச் வலயம்) தெரியப்பட்டிருந்ததுடன் வரிக்காக கொடுப்பனவு செய்வதற்கு வரி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதற்கு அறிக்கையினை தேடிக்கண்டு பிடிக்க முடியாதிருந்தது.

**(இ) அலுவலகம் அமைந்துள்ள பண்ணை**

26 ஏக்கர்களைக் கொண்ட இக்காணி மஹவெலி அதிகார சபைக்குரியதுடன் காணி சம்பந்தமாக 1989 ஒக்தோபர் 03 ஆந் திகதி முப்பது ஆண்டு குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் நிபந்தனைகளுக்கு இணங்க 2019 ஆம் ஆண்டின் ஒக்தோபர் 02 ஆந் திகதி குத்தகை கால எல்லை முடிவடைந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்தமாக 31,099 சதுர அடி கட்டிடம் மற்றும் 46,924 சதுர அடி பரப்பளவிலான பெறுமதியுள்ள நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள (பெறுமதி இல்லை) இக்காணிக்குரிய உடன்படிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அமைப/15/0940/631/018-1 ஆம் இலக்க 2015 யூலை 16 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் காட்டப்பட்டுள்ளவாறு BD/RDS/124/CM/07 ஆம் இலக்க 2015 யூலை 08 ஆந் திகதிய நிதி அமைச்சு அவதானிப்புக்களின் பிரகாரம் உரிய சட்டரீதியான நடைமுறையின் கீழ் கம்பனியின் செயற்பாடுகளின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து வளங்கள், சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவம் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் 2017 ஆம் ஆண்டின் போது கம்பனியின் பங்குகளின் உரிமைகளில் 27 சதவீதம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இன்றுவரை சுவீகரிப்புச் செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.1.1 திட்டமிடல்**

(அ) கம்பனியின் அமைப்பு நியதிச்சட்டத்தின் பிரகாரம் கம்பனியால் நிறைவேற்றப்பட வேண்டியபோதிலும் பின்வரும் செயற்பாடுகள் கம்பனியால் தற்பொழுது நிறைவேற்றப்படுவதில்லை.

- கோழி உணவு விற்பனை செய்தல்
- பசுக்களின் உயிருள்ள மற்றும் உயிரற்ற பகுதிகளை விற்பனை செய்வதற்கு இனவிருத்தி, இறக்குமதி, ஏற்றுமதிகளை தயாரித்தலும் கொடுக்கல் வாங்கல் செய்தலும்.
- பசுக்களின் உயிருள்ள மற்றும் உயிரற்ற பகுதிகளை விற்பனை செய்வதற்கு இனவிருத்தி, இறக்குமதி, ஏற்றுமதிகளை தயாரித்தலும் கொடுக்கல் வாங்கல் செய்தலும்.
- படர், சீஸ், ஐஸ்கிறீம், விற்பனை செய்வதற்கு ஏற்றுமதி, இறக்குமதிகளை தயார்படுத்தலும், கொடுக்கல் வாங்கல் செய்தலும்.
- தானியங்களை உற்பத்தி செய்தல் மற்றும் தானிய வகைகள் பழங்கள் மற்றும் மாவு இருப்புக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்தல்.

**(ஆ) கூட்டிணைந்த திட்டம் 2017/2018**

2003 யூன் நல்லாட்சி தொடர்பான அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 12 மற்றும் 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் பிரகாரம் நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் தயாரிக்கப்படுகின்ற கூட்டிணைந்த திட்டம் பணிப்பாளர் சபை அங்கீகரித்ததன் பின்னர் வரிசை அமைச்சு, அரசாங்க

தொழில் முயற்சிகள் தொடர்பான திணைக்களம், பொதுத் திறைசேரி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் கூட்டிணைந்த திட்டமானது கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 25 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயல் நடவடிக்கைத் திட்டம் 2017/2018**

(i) இக்கம்பனியின் நிதி ஆண்டு ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து மார்ச் 31 ஆந் திகதி வரையானதாக இருந்ததுடன் 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 5(2) ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்ட திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்துவரும் நிதி ஆண்டின் போது அதாவது 2017 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையான நிதி ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்குச் சமர்பதித்த செயல்நடவடிக்கைத் திட்டமானது 2018 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) அவ்வாறு தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்காததுடன் அதில் உள்ளடங்கியிருக்க வேண்டிய பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) வருடாந்த பாதீட்டில் உள்ளடங்க வேண்டிய நிதி நிலைமைக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று.

(ஆ) மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம்.

(இ) உள்ளக கணக்காய்வுத் திட்டம்.

(ஈ) நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் தாபன கட்டமைப்பு, அங்கீகரித்த பதவியணியினர் மற்றும் தற்பொழுது உள்ள பதவியணியினர் தொடர்பான விபரம்.

(iii) 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமானது கம்பனியில் அமுல்ப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு செயற்திட்டம் மற்றும் அதன் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளை தனித்தனியாக இனங்கண்டு திட்டமிடப்படாததுடன் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கும் பௌதீக இலக்குகள் குறிப்பிடப்படவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது.

(iv) கம்பனியால் மேற்கொள்ளப்படுகின்ற தென்னைப் பயிர்ச் செய்கை, சோளப் பயிர்ச் செய்கை தொடர்பான விபரம் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) செயலாற்றல் அறிக்கை 2017/2018**

2017 ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையான நிதி ஆண்டிற்காக செயயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த செயலாற்றல் அறிக்கையானது 2018 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக பின்வருபவை அவதானிக்கப்பட்டன.

(i) 2018 ஆம் ஆண்டிற்காக கம்பனியால் கோழிச் செயற்திட்டம் தொடர்பான பௌதீக செயல்முன்னேற்றத்திற்காக மாத்திரம் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியின் பன்றி செயற்திட்டம், கம்பனியின் விவசாய பயிர்ச் செய்கைகள் ஏனைய பயிர்செய்கைகள், நிர்மாணங்கள் முதலியவற்றின் செயல்முன்னேற்றமும் உள்ளடக்கப்பட்டு ஒட்டுமொத்த நிறுவனத்திற்குமாகவும் தயாரிக்கப்பட்ட பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றத்தினைக் காட்டும் முறையான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2018 ஆம் ஆண்டிற்கான கம்பனியால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமானது ஒவ்வொரு செயற்திட்டம் மற்றும் அதன் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளை தனித்தனியாக இனங்கண்டு திட்டமிடப்பட்டிருக்காததனால் செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கால்நடை செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றத்துடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு செயற்திட்டத்துடன் ஒப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**4.1.2 செயலாற்றலும் மீளாய்வும்**

மஹவெலி அதிகார சபையின் இரண்டு காணிகள் அமைந்துள்ள நிராவிய கொமர்சல் புரொயிலர் யுனிட் பண்ணை மற்றும் குரோவர் யுனிட் பண்ணை ஆகிய இரண்டு பண்ணைக்ள 20,000 இற்கு மேற்பட்ட அளவிலான புரொயிலர் கோழிகளையும் தாய்க் கோழிகளையும் போடுவதற்காக 5 கோழிக் கூடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மஹவெலி கால்நடை செயற்திட்ட கம்பனியால் மஹவெலி அதிகார சபையுடன் அக்காணியை பயன்படுத்துவதற்காக குத்தகை உடனபடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உரிமை இல்லாத காணிகளில் நிர்மாணங்களை மேற்கொண்டு பராமரித்தலானது நிறுவனம் தொடர்ந்து நிலைத்திருத்தல் சம்பந்தமாக சிக்கலை உருவாக்கலாம் என அவதானிக்கப்பட்டது.

**4.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்க்ள மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கையில் 6 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டன என்பது காட்டப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதன் மூலம் எதுவித பெறுமதியினைக் காட்டியிருக்காததனால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தகவல் கீழே தரப்படுகின்றன.

- Mistsubishi Cantter Freezer Truck JJ 4864
- Samce Tractor With Tayler RB-0578
- Lorry- Isuzu
- Lorry - Hino 42 சிறீ 1471
- Issusu Lorry- 42/0445
- Issusu Freezer Truck - 41-8820

(ஆ) நாளாந்தம் 3 தொன் அளவிலான உணவுகளை உற்பத்தி செய்த ஹுரிகஸ்வெவ கோழி உணவு உற்பத்தி வேலைத்தளத்தில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரம் 2015 ஆம் ஆண்டு வரை உணவு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது எனவும் அது 2015 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுத் திகதியான 2018 ஆம் ஒக்தோபர் 25 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 யூலை 08 ஆந் திகதிய BD/RDS/124/CM/07 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மஹவெலி கால்நடை தொழில்முயற்சி கம்பனியின் 5 வாகனங்கள் மஹவெலி அபிவிருத்தி அதிகார சபையின் கம்பனிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்தொபர் 25 ஆந் திகதி வரை அந்த வாகனங்கள் ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் 30/2016 ஆம் இலக்க 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்**

(அ) 2020 யூன் 18 ஆந் திகதி தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் மூலம் கம்பனி சம்பந்தமாக மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு ஐயவினாவில் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் 05 ரோல் செம்பு வயர்கள் மிகை இருப்பு விடயங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது எனவும் 2017 நவம்பர் 12 ஆந் திகதி உடைந்த

பொருட்ககளை நீக்கும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர்கள் அந்த இருப்பு மீளாய்வு சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தார்கள் எனவும் காட்டப்பட்டிருந்தது. 2020 நவம்பர் 18 ஆந் திகதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அந்த வயர் இருப்புக்களின் நிறை 419.5 கிலோகிராம் என காட்டப்பட்டிருந்ததுடன் இணைய தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2020 நவம்பார் 18 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த இருப்பின் பெறுமதி ரூபா 251,700 என அவதானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக கம்பனி 2017 நவம்பர் 14 ஆந் திகதி பொலிசில் முறைப்பாடு செய்ததனைத் தவிர்த்து எந்த புலனாய்வும் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் ஒரு டபிள் கெப் வாகனம் தலைவரினால் பயன்படுத்தப்படுகின்றது என கணக்காய்விற்கு 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எனினும் அந்த வாகனம் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்வது சம்பந்தமாகவும் எதுவித எழுத்துமூல ஆவணமும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையிடமோ அல்லது மஹவெலி கால்நடை தொழில்முயற்சி கம்பனியிடமோ இருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 33 உத்தியோகத்தர்களுக்கு கடமை ஒப்படைப்பு எழுத்துமூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரித்த பதவியணியினைத் தயாரித்து பொதுத்திறைசேரியின் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட வேண்டியதுடன் அச்சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் நடைமுறையினைத் தயாரித்து அதற்கிணங்க உரிய அமைச்சின் மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அதற்கிணங்க கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 10 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினருக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்கள சுற்றிக்கை இலக்கம் PED/12 இன் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த கணக்கறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017/18 நிதி ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 43 மாத தாமதம் அவதானிக்கப்பட்டது.

ஃ

### 5.2 பெறுகைகள்

பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதன் பின்னர் வரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விபரமாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியால் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 6. பங்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பட்டுக் குறைபாடுகள் அடிக்கடி கம்பனியின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்ரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்குகளைச் சமர்ப்பித்தல் | சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை |
| (ஆ) | பெறுகை நடவடிக்கைகள் | பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. |
| (இ) | சொத்துக்கள் கடப்பாடு | முறைப்படியாக சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை சொத்துக்கள் முறைப்படியாக பொறுப்பேற்கப்படாமை சொத்துக்கள் பயன்படுத்தப்படாது காணப்படுகின்றமை, பொருள் மீளாய்வு அறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையும் பட்டோலைகள் தயாரிக்கப்படாமையும். |
| (ஈ) | ஏடுகளைப் பராமரித்தல் | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை, |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | தகவல்களை உள்ளடக்கிய வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் பூரணப்படுத்தப்படாமை, வாகனங்கள் தொடர்பான வருடாந்த மீளாய்வு செய்யப்படாமை, பண்ணைக்கு உள்வருகின்ற மற்றும் வெளிச்செல்கின்ற வாகனங்கள் தொடர்பாக முறையான பரீட்சிப்புக்கள் இடம்பெறாமை, |
| (ஊ) | பெறவேண்டியவைகள் | பெறவேண்டிய வணிகக் கடனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (எ) | செலுத்த வேண்டியவைகள் | கொடுப்பனவுகள் முறைப்படியாக நிறைவேற்றப்படாமை |
| (ஏ) | பின்தொடர் நடவடிக்கைகள் | செயல்நடவடிக்கைத்திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு பின்தொடர் நடவடிக்கை எடுத்தல். |